Registered as a News Paper   பக்கங்கள் 04   விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM   Peoples Daily   மக்கள் தினசரி

நாதம் 03   திருவள்ளுவர் ஆண்டு 2023   கார்த்திகை 18   (03-12-1992)   வியாழக்கிழமை   ஓசை 289

## புதுக்குடியிருப்பில் வங்கிக் கிளையை இயங்க வைக்க முயற்சி

முள்ளலத்தீவில் முன்னர் இயங்கி வந்த மக்கள் வங்கி கிளை மிக விரைவில் புதுக்குடியிருப்புக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதாக பிராந்திய மக்கள் வங்கி முகாமையாளர் தெரிவித்தார். இராணுவ நடவடிக்கையினால் முல்லைத்தீவு கிளையின்முழு ஆவணங்களும் இராணுவத்தினரால் எடுத்து செல்லப்பட்டது தெரிந்ததே. மக்கள் வங்கியின் உயர் அதிகாரிகள் குழுவினர் முல்லைத்தீவு பகுதிக்கு சென்று ஒரு பகுதி ஆவணங்களை எடுத்து வந்ததாகவும் இன்னும் முக்கியமான ஆவணங்களை பெட்டகம் திறக்க முடியாமையினால் எடுத்துவரமுடியவில்லைஎன்று மேலும் தெரிவித்தார். தற்போது பெட்டகத்தைதிறப்பதற்கு தொழில் நுட்பவியலாளருடன் செல்ல கூட்டுப்படைத் தலைமை அலுவலக

(4ஆம் பக்கம் பார்க்க)

### ( வன்னி எல்லையில் புலிகள் வீர சாதனை )

# மூன்று இராணுவ முகாம்கள் தகர்ப்பு

# 20 படையினர் பலி; 40 பேர் படுகாயம்

## அதிகாலையில் நிகழ்ந்த திடீர்தாக்குதல்

[வவுனியா]

விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதல் ஒன்றில் வவுனியா – மன்னார் எல்லையோரத்தில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவத்தினரின் மூன்று முகாம்கள் நிர்மூலமாக்கப்பட்டன. இத் தாக்குதலின் போது குறைந்தது இருபது இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். நாற்பதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் பெருமளவு ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

விடுதலைப்புலிகள் தரப்பில் ஒன்பது போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வவுனியா - மன்னார் எல்லைப் பகுதியில் அமைந்திருந்த வண்ணான் குளம் (கட்டுப்பத்தை), கந்துருவெல, வீரவெல ஆகிய மூன்று முகாம்களுமே விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட இராணுவ முகாம்களாகும்.

நேற்று அதிகாலை 12.30 மணிக்கு மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதல் சுமார் 10 நிமிடங்கள் வரை நீடித்தது. அதன் பின்னர் முகாம்கள் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன.

இம் மோதலில் இருபதுக்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். நாற்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் காயமடைந்தனர். புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் இறந்த சகாக்களின் சடலங்களை விட்டு விட்டு காயமடைந்தவர்களைத் தூக்கிக் கொண்டு ஓடிவிட்டனர்.

முகாம்களைக் கைப்பற்றிய விடுதலைப் புலிகள் அங்கிருந்து ஆயுதங்களைக் கைப்பற்றிய பின்னர் முகாமை அழித்ததாகவும் தெரியவருகின்றது.

## 9 விடுதலைப் புலிகள் வீரச்சாவு

(வவுனியா)

வவுனியா - மன்னார் எல்லைப் பகுதிகளில் அமைந்திருந்த வண்ணான்குளம், கந்துருவெல, வீரவெல சிறிலங்கா இராணுவ முகாம்கள் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இதில் விடுத

பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

★ லெப். குணசீலன் (அனஸ்றின்) சண்முகரெட்ணம், சதீஸ்வரன், செம்மண்தீவு, முருங்கன், மன்னார்.

★ லெப். ஜெயா (சண்முகராசா சிவகுமார்), வேலணை யாழ்ப்பாணம்.

★ லெப் குரு (பூபாலப்

(அந்தோனிப்பிள்ளை அருள்பரியராசா) மணல் ஒழுங்கை, பருத்தித்துறை.

★ வீரவேங்கை மதியழகன் (சுப்பிரமணியம், கஜேந்திரன், உடுவில் வீதி, மானிப்பாய்.

★ வீரவேங்கை சரோஜன் (சிதம்பரநாதன் சிவனேசன், மட்டுவில் நாடு மேற்கு, பூநகரி

### இரு தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

முந்தல் கடற்கரைக்கு அப்பால் படகொன்றில் வந்த இரு தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பயணம் செய்த படகில் எரிபொருள்களும், ஜெனரேட்டர்களும், பெருந்தொகையான பொலித்தீன்களும் இருக்க கண்டுபிடிக்கப்பட்டதாகவும் கூறப்படு

### வீரச்சாவு



2-ம் லெப். குலமகள்

பலாலி கிழக்கில் கடந்த மாதம் 24-ம திகதி சிறிலங்கா இராணுவத்தினருடன் நடைபெற்ற மோதலில் விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்று வந்த விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் நேற்று அதிகாலை வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த 2-ம் லெப்டினன்ட் குலமகள் [ஜமீலா] (முருகையா மாலா, அளவெட்டி வடக்கு, அளவெட்டி) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத்

## திருமலையில் தேடுதல் தமிழர்கள் 9பேர் கைது

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் கடந்த ஒருவாரமாக சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல் வேட்டையின் போது இளைஞர், யுவதிகள், வயோதிபர்கள் உட்பட ஒன்பதுபேரைக் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

திருமலை மாவட்டத்தில் அமைந்துள்ள நிலாவெளி, கோபாலபுரம் பகுதிகளை 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதிவரை சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் கோபாலபுரத்தைச் சேர்ந்த

[4 ஆம் பக்கம் பார்க்க]

### தமிழர்களுக்கு விடுதிவசதி வழங்கிய

## பத்துச் சிங்களவர்கள் மீது வழக்குத்தாக்கல்

கொழும்பில் தமிழருக்கு விடுதி வசதி வழங்கிய பத்து சிங்களவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது இவர்கள் பொலிசாரிடம் பதிவு செய்யாமல் தமிழர்களுக்கு விடுதி வசதி வழங்கினார்கள் என்றும் வத்தளைப் பகுதியைச் சேர்ந்த இச் சிங்கள வர்த்தகர்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த தமிழர்களுக்கு விடுதி வசதி கொடுத்தனர் என்றும் கூறப்படுகின்றது.

## சர்வதேச தீவிரவாதி கொழும்பில் கைது

(கொழும்பு)

சர்வதேச தீவிரவாத இயக்கங்களுடன் தொடர்புடைய ஒருவர் கொழும்பில் கைது

பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன

பிரிட்டன், பிரான்ஸ், கனடா, ஜேர்மனி கவி...சர்

மளவு ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.
## விடுதலைப்புலிகள் தரப்பில் ஒன்பது போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வவுனியா - மன்னார் எல்லைப் பகுதியில் அமைந்திருந்த வண்ணான் குளம் (கட்டுப்பத்தை), கந்துருவெல, வீரவெவ ஆகிய மூன்று முகாம்களுமே விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட இராணுவ முகாம்களாகும்.

நேற்று அதிகாலை 12.30 மணிக்கு மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதல் சுமார் 10 நிமிடங்கள் வரை நீடித்தது. அதன் பின்னர் முகாமகள் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன.

இம் மோதலில் இருபதுக்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். நாற்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் காயமடைந்தனர். புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் இறந்த சகாக்களின் சடலங்களை விட்டு விட்டு காயமடைந்தவர்களைத் தூக்கிக் கொண்டு ஓடிவிட்டனர்.

முகாம்களைக் கைப்பற்றிய விடுதலைப் புலிகள் அங்கிருந்து ஆயுதங்களைக் கைப்பற்றிய பின்னர் முகாமை அழித்ததாகவும் தெரியவருகின்றது.

# 9 விடுதலைப் புலிகள் வீரச்சாவு

(வவுனியா)

வவுனியா - மன்னார் எல்லைப் பகுதிகளில் அமைந்திருந்த வண்ணான்குளம், கந்துருவெல, வீரவெல சிறிலங்கா இராணுவ முகாம்கள் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இதில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஒன்பது போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த போராளிகளின் விபரம் வருமாறு

★ லெப். செல்வம் (பாக்கியநாதன், செல்வநாதன்) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

★ லெப். குணசீலன் (அனஸ்ரின்) சண்முகரெட்ணம், சதீஸ்வரன், செம்மண்தீவு, முருங்கன், மன்னார்.

★ லெப். ஜெயா (சண்முகராசா சிவகுமார்), வேலணை யாழ்ப்பாணம்.

★ லெப் குரு (பூபாலைப்பிள்ளை ரவி), 8-ம் குறிச்சி, அக்கரைப்பற்று, அம்பாறை.

★ லெப். அரவிந்தன் (ராஜரெட்ணம் சந்திரமோகன். பெரிய புல்லுமலை. மட்டக்களப்பு.

★ வீரவேங்கை நிமலன் (அந்தோனிப்பிள்ளை அருள்பரியராசா) மணல் ஒழுங்கை, பருத்தித்துறை.

★ வீரவேங்கை மதியழகன் (சுப்பிரமணியம், கஜேந்திரன், உடுவில் வீதி, மானிப்பாய்.

★ வீரவேங்கை சரோஜன் (சிதம்பரநாதன் சிவனேசன், மட்டுவில் நாடு மேற்கு. பூநகரி

★ வீரவேங்கை ஜீவகுமார் (சங்கரப்பிள்ளை கிரிதரன்) பெரியதம்பனை, வவுனியா.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## இரு தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

முந்தல் கடற்கரைக்கு அப்பால் படகொன்றில் வந்த இரு தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பயணம் செய்த படகில் எரிபொருள்களும், ஜெனரேட்டர்களும், பெருந்தொகையான பொலித்தீன்களும் இருக்க கண்டுபிடிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.



## 2-ம் லெப். குலமகள்

பலாலி கிழக்கில் கடந்த மாதம் 24-ம திகதி சிறிலங்கா இராணுவத்தினருடன் நடைபெற்ற மோதலில் விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்று வந்த விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் நேற்று அதிகாலை வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த 2-ம் லெப்டினன்ட் குலமகள் [ஜமீலா] (முருகையா மாலா, அளவெட்டி வடக்கு, அளவெட்டி) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

முகாமுக்குக் கொண்டு சென் ... [4 ஆம் பக்கம் பார்க்க]

தமிழர்களுக்கு விடுதிவசதி வழங்கிய

## பத்துச் சிங்களவர்கள் மீது வழக்குத்தாக்கல்

கொழும்பில் தமிழருக்கு விடுதி வசதி வழங்கிய பத்து சிங்களவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது இவர்கள் பொலிசாரிடம் பதிவு செய்யாமல் தமிழர்களுக்கு விடுதி வசதி வழங்கினார்கள் என்றும் வத்தளைப் பகுதியைச் சேர்ந்த இச் சிங்கள வர்த்தகர்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த தமிழர்களுக்கு விடுதி வசதி கொடுத்தனர் என்றும் கூறப்படுகின்றது.

## சர்வதேச தீவிரவாதி கொழும்பில் கைது

(கொழும்பு)

சர்வதேச தீவிரவாத இயக்கங்களுடன் தொடர்புடைய ஒருவர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன

பிரிட்டன், பிரான்ஸ், கனடா, ஜேர்மனி சுவிட்சர் [4 ஆம் பக்கம் பார்க்க]

# கொப்பேகடுவ மரணம் அரசின் சதி; சர்வதேச நீதிவிசாரணைவேண்டும்

## - திருமதி கொப்பேகடுவ கோருகிறார்

[கொழும்பு]

லெப். ஜெனரல கொப்பேகடுவ, அவர் பயணம் செய்த வாகனத்தில் மறைத்து வைக்கப்பட்ட வெடிகுண்டினாலேயே கொல்லப்பட்டார் என்று கொப்பேகடுவவின் மனைவி லலி கொப்பேகடுவ தெரிவித்துள்ளார்.

இராணுவத்தின் உள்ளேயே அதிகாரிகள் மத்தியில் நிலவிய போட்டி பகை காரணமாகக் கொப்பேகடுவ கொலைப்பட்டதாக அவர் கூறினார். கொப்பேகடுவவின் அதிகாரத்தைக் குறைக்கவும், இராணுவத்தில் அவரது முக்கியத்துவத்தைக் குறைக்கவும் செய்யப்பட்ட சதியே கொப்பேகடுவவின் கொலை என்று அவர் சிறிலங்காவின் பாதுகாப்புப் படையையும், அரசாங்கத்தையும் பகிரங்கமாகவே குற்றம் சாட்டினார்.

திருமதி லலி கொப்பேகடுவ நேற்று உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்தியாளர் மாநாட்டில் பேசும் போதே இவ்வாறு கூறினார். செய்தியாளர் மாநாட்டில் அனைத்து எதிர்கட்சித் தலைவர்களும் குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் கலந்து கொண்டார்

கொப்பேகடுவவின் கொலை குறித்து சர்வதேச மட்டத்திலான நீதி விசாரணைக் குழு ஒன்றை அமைக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள்


(4 ஆம் பக்கம் பார்க்க)

## மேஜர் அபயன் உட்பட இரு போராளிகள் வீரச்சாவு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மகிழவெட்டுவான் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் இரு போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவடைந்த மேஜர் அபயன் [கிருஷ்ணமூர்த்தி சிவகுமார், தெல்லிப்பழை கிழக்கு], 2-ம் லெப்டினன்ட் மதிமுகன் [நவாஸ்] (இளையதம்பி அரியநாயகம், விநாயகர் வீதி, பெரியபுல்லுமலை) ஆகியோருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



மேஜர் அபயன்



2 ம் லெப். மதிமுகன்

## சர்வதேச விசாரணைக்குழு; நியமிக்க அரசு தயார்

### ஜனாதிபதி செயலாளர் அறிவிப்பு

[கொழும்பு]

திருமதி லலி கொப்பேகடுவவின் வேண்டுகோளுக்கிணங்க லெப். ஜெனரல் கொப்பேகடுவவின் கொலை குறித்து விசாரிக்க சர்வதேச ரீதியிலான விசாரணைக்குழு ஒன்றை நியமிக்க அரசு தயாராக இருப்பதாக ஜனாபதியின் செயலாளர் ஜே.எச்.ஜே. விஜயதாசா தெரிவித்தார்

நேற்று செய்தியாளர் மாநாட்டின்பின் லலி கொப்பேகடுவ பிரதம மந்திரிக்கு அனுப்பிய கடிதத்திற்குப் பதிலளிக்கும் வகையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் ஆகஸ்ட் 11-ம் திகதி இடம்பெற்ற கொப்பேகடுவவின் மரணத்தைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தனிநபர் விசாரணைக்குழு ஒன்றை இளைப்பாறிய நீதிபதி ஐ எம் இஸ்மெயில் தலைமையில் நியமித்தார் என்றும்,

பாவிக்கப்படாத பாதையில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியில் வாகனம் சிக்கியதால் கொப்பேகடுவவும் மற்றும் ஒன்பது பேரும் கொலையுண்டார்கள் என்றும் ஜனாதிபதியின் செயலாளர் தன் அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

திருமதி லலி கொப்பேகடுவவிடம் இருந்துதான் பதிலை

[4 ஆம் பக்கம் பார்க்க]

# பெருமளவு ஆயுதங்களை புலிகள் கைப்பற்றினர்

[வவுனியா]

நேற்று அதிகாலை விடுதலைப் புலிகளால் கைப்பற்றி அழிக்கப்பட்ட வண்ணான்குளம் [கட்டுப்பத்தை] கந்துருவெல, வீரவெல ஆகிய இராணுவ முகாம்களில் இருந்து பெருமளவிலான ஆயுதங்களும், இராணுவ உபகரணங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இதில் சில ஆயுதங்களின் விபரங்கள் வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| ★ | ஏ. கே. எல். எம். ஜி | — | 01 |
| ★ | ரி 81 எல். எம் ஜி | — | 01 |
| ★ | ஆர். பி. ஜி | — | 01 |
| ★ | மோட்டோர் | — | 02 |
| ★ | 40 எம். எம் பிஸ்டல் | — | 02 |
| ★ | தொலைத்தொடர்புசாதனம் | — | 02 |

இவை தவிர பல தானியங்கித் துப்பாக்கிகளும், பெருமளவு ரவைகளும், வேறு இராணுவ உபகரணங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன

இவை தொடர்பான மேலதிக விபரம் நாளைய ஈழநாதத்தில் வெளிவரும்.

# அரசியலில் மகாசங்கத்தினர் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும்

## தலதாமாளிகை தியவதன நிலமே கோரிக்கை

(கண்டி)

அரசியல் பிரசாரங்களில் ஈடுபடுவதை மகா சங்கத்தினர் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று தலதாமாளிகையின் தியவதன நிலமேயான நிரஞ்சன் விஜியரத்தின வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் தமது வேண்டுகோளில் மேலும், கட்சி அரசியல் தான் இந்த நாட்டின் கேட்டிற்கு காரணம் என்றும், இதனால்தான் சமூக ஒழுங்கும், மனித உயிர்களின் பெறுமானமும் அழிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். இந் நிலையில் மகா சங்கத்தினர் தான் நாட்டையும், இனத்தையும், மதத்தையும் காப்பாற்ற வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தமணப் பகுதியில் இருக்கும் தர்மராஜா பாடசாலையில் வருடாந்த பரிசளிப்பு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பதிவுசெய்ய செல்வோரிடம் ஆதார நிதி உதவி வசூல்

(கொழும்பு)

பொலிஸ் நிலையங்களுக்குத் தமது பெயர்களைப் பதிவு செய்யச் செல்லும் வாடகைக் குடியிருப்பாளருக்கு ஆதார நிதி உதவி டிக்கட்டுகளும் விற்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சில பொலிஸ் நிலையங்களில் விண்ணப்பப் படிவம் முடிந்துவிட்டதாகவும் ஒரு சில பத்திரங்களே இருப்பதால் அதனைப் போட்டோ பிரதி எடுத்து விபரங்களை நிரப்பித் தருமாறு வாடகைக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி.
(இ-5510)

### மாதிரி வினாத்தாள்கள்

O/L வகுப்புகளிற்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம் (சைவம், றோ. க./கிறீஸ்தவம்), வர்த்தகம், விவசாயம், மனைப் பொருளியல், சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் (விடைகளுடன்) மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond Institute, 582 Stanley Road, Jaffna.
(சி-5450)

### விற்பனைக்கு

அழகிய படத்துடனான கலண்டர்கள் விற்பனையாகின்றன. பல வர்ணக் கலர்களில் விலாசம் பதிப்பித்தும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகள் தங்களின் தேவைக்கேற்றபடி கொள்வனவு செய்து ஏமாற்றத்தை தவிர்த்துக் கொள்ளுங்கள் ஸ்ரீகாந்தா அச்சகம் - புத்தகசாலை 330 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(3640)


# அரசு முன்னாள் இராணுவத்தினரை நட்டாற்றில் கைவிட்டு விட்டது

## - பிரிகேடியர் ஆரியப்பெருமாவின் மகள் கவலை

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் விடுதலைப் புலிகளுடன் நடைபெறும் யுத்தத்தில் கொலைப்படும் அனைத்து இராணுவத்தினரையும் சிறிலங்கா அரசு பாரபட்சமின்றி சமனாகக் கணிக்க வேண்டுமென பிரிகேடியர் ஆரியப்பெருமாவின் மகள், 'திவயின' என்றசிங்களப் பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

மேற்படி பத்திரிகைக்கு அவர் வழங்கிய பேட்டியின் முழு விபரமும் வருமாறு;

1984 நவம்பர் 19ஆம் திகதி பலாலி பகுதியில் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி எனது தந்தை பலியானார். அப்போது எனக்கு வயது 14. எனது சகோதரிக்கு 16 வயது அவ்வேளை நாம் மிகவும் வறுமை நிலையில் இருந்தோம். அரசு இரண்டு பதக்கங்களை மட்டுமே வீட்டிற்கு அனுப்பி வைத்தது. நஷ்டஈடுகூட ஒழுங்கான முறையில் எங்களுக்கு வழங்கப்படவில்லை. அதனைப் பெறுவதற்கு எனது தாயார் பல வருடங்கள் அலைந்து திரிய வேண்டிய நிலை ஏற்பட்டது. தந்தை இறந்த மூன்றாவது மாதம் நாம் தங்கியிருந்த விடுதியிலிருந்து எம்மை இருவாரங்களுக்குள் வெளியேறுமாறு வீட்டிற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது இதனால் நாங்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளானோம்.

தொடர்ந்து அங்கு தங்க அனுமதிக்கும்படி நாம் கேட்ட போதும்அது பயனற்றதாகவே இருந்தது நாம் வெளியேறிய பின் ஆறுவருடங்கள் அவ்வீடு பூட்டிய நிலையிலேயே இருந்தது. எனது தந்தை 1984இல் புலிகளின் பகுதியில் நடைபெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டார். ஆனால் தற்போது இறந்த கொப்பேகடுவ, விஜய விமலரட்ண கிளான்சி பர்னான்டோ ஆகியோர் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வைத்துக் கொல்லப்பட்டனர்,

எனது தந்தை நாட்டிற்காக 26 வருடங்கள் சேவையாற்றினார். ஆனால் இன்று இருக்கும் இராணுவத்தினருக்கு பல இலட்ச ரூபாய்களை அரசு உடனடியாகவே அவர்களின் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கிறது அரசினது இப்பாரபட்சமான செயற்பாட்டை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இதுவரை இறந்த அனைத்து இராணுவத்தினரும் நாட்டிற்காகவே இறந்தார்கள், அரசின் இவ்வஞ்சகச் செயலானது என்போன்றோரின் மனநிலைகளை பெரிதும் பாதிக்கிறது. நாட்டிற்காக உயிரைத் தியாகம் செய்யும் அனைத்து இராணுவத்தினரது மரணங்களும் காலத்தால் அழியாதவை. இவற்றை அரசு கிரிக்கட் விளையாட்டைப் போல் கருதக்கூடாது.

அன்றைய காலகட்டத்தில் 10வருடத்திற்கு ஆயிரம் இராணுவத்தினரே கொல்லப்பட்டனர். ஆனால் தற்போது வருடாந்தம் ஆயிரத்திற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்படுகின்றனர் என்றார்.

## ஆசிரியர் வேதனம்

இம் மாதத்துக்குரிய ஆசிரிய சம்பளக் கொடுப்பனவு 18ஆம் திகதி வழங்கப்பட வேண்டுமென வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதம கணக்காளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளை சகல மாவட்ட கோட்டக்கல்விப் பணிப்பாளருக்கும் சுற்றறிக்கை மூலம் தெரியப்படுத்தி உள்ளார்.

இவ் வேலையை முடிப்பதற்காக கல்வி அலுவலகங்களிலும், கோட்டக்கல்வி அலுவலங்களிலும் உள்ள ஆசிரிய சம்பளக் கிளையிலும் நிதிக் கிளையிலும் கடமையாற்றும் சம்பள வேலைகளை செய்யும் சம்பள எழுதுநர்களுக்கு மேலதிகநேர வேலை செய்ய அனுமதிக்கப்பட்டு அதற்கான மேலதிகநேரக் கொடுப்பனவும் வழங்கப்பட வேண்டும் எனவும் இவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
(17)

## பொது அறிவுப் போட்டி

யாழ் சுண்டிக்குளி பாரதி இளைஞர் அறிவியற்கழகம் பொதுஅறிவுப் போட்டி ஒன்றினை ஆண்டு ஆறுமுதல் ஆண்டு 11 வரை யாழ் மாவட்டத்தில்உள்ளசகல பாடசாலைகளிலும் மாணவர்களுக்கிடையே நடாத்துவது எனத் தீர்மானித்துள்ளது.

இப் போட்டிக்கான விண்ணப்பங்கள் யாவும் செயலாளர், பாரதி அறிவியற்கழகம், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கிடையில் அனுப்பி வைக்குமாறு கழகத்தின் தலைவர் திரு.ம. இ லோஷன் தெரிவித்துள்ளார்.

முதலாம் பரிசு 1500 ரூபா, இரண்டாம் பரிசு 1000 ரூபா, மூன்றாம் பரிசு 750 ரூபாவும், பத்து ஆறுதல் பரிசுகளும் போட்டிகளில் வெற்றி பெறுவோர்களுக்கு வழங்கப்பட உள்ளது.
(24)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பலநோக்கு கூட்டுறவுச்சங்கத் தலைவர்கள் பொது முகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 10.00 மணிக்கு மணிக்கூட்டு வீதியில் உள்ள யாழ். மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் சபையின் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறும்.
(22)


## கண்ணீர் அஞ்சலி

அமரர் **தாமோதரம்பிள்ளை தர்மசேகரம்**

(மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)

30. 11. 92இல் கொழும்பில் அமரத்துவம் அடைந்த தா. தர்மசேகரம் அவர்கட்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

முகாமையாளரும், சகஊழியர்களும்
மக்கள் வங்கி
யாழ் நவீனசந்தை கிளை
(3740) யாழ் ஊழியர் நலன்புரிச் சங்கம்.

**University Of Jaffna**

Tender for the supply of Furniture

Sealed tenders are invited for the following:

| | | |
|---|---|---|
| 1. | Straight Back Chair | - 13 nos |
| 2. | Arm Chair | - 07 nos |
| 3. | Table | - 13 nos |
| 4. | Executive Table | - 01 no |
| 5. | Timber bench | - 10 nos |
| 6. | Bed | - 08 nos |
| 7. | Key Board 2'X3' | - 01 no |
| 8. | Notice Board | - 02 nos |
| 9. | Book Press | - 02 nos |
| 10 | Periodical Display Shelves | - 05 nos |
| 11. | Ola manuscript Cabinets | - 02 nos |
| 12. | Catalogue Cabinets | - 02 nos |

Drawings and relevant details could be obtained from the Bursar, University of Jaffna. between 1992-12-07 to 1992-12-10 during office hours on payment of Rs. 200/- as non-refundable deposit and Rs. 5,000/- as refundable deposit.

Sealed tenders should be forwarded to the Bursar University of Jaffna on or before 10.00 a.m. on 1992-12-15 indicating "Tenders for Furniture" on the left hand corner of the envelope. The Tender will be opened on the same day at 10.30 a. m.

\- Registrar

(சி/5524)

யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

**புதிய வகுப்புக்கள்**

**(ஆண்டுகள் 5,6,7,8,9,10,11)**

யாவும்

**05-12-92**

[சனிக்கிழமை]

பி. ப. 3 மணி

(சி-5521)

**கலை வர்த்தகக் கல்லூரி**

**C. C. A.**

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்

ஆண்டு: 9, 10, 11

மாலை நேர வகுப்புக்கள்

**ஆரம்பம்: 5.12.92**

விஞ்ஞானம் திரு- இரா.செல்வவடிவேல்


## சிறுவன் மரணம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட விசர்நாயினால் கடியுண்ட சிறுவனொருவன் மரணமானான்.

துன்னாலை தெற்கைச் சேர்ந்த ஜெயம் உதயகுமார் (வயது 12) என்ற சிறுவனே விசர்நாய்க் கடியால் மரணமான சிறுவனாவான். பருத்தித்துறைப் பகுதியில் நாய் கடித் தொல்லை அதிகரித்து வருவதாகவும், இவ் வைத்தியசாலையில் விசர்நாய்க்கடிக்கான ஊசி மருந்துகள் இல்லா

# வவுனியாவுக்கு லொறிகள் மீண்டும் அனுமதி

ஒருவாரத்தின் பின்னர் வடபகுதி லொறிகள் இராணுவ சோதனை முகாம் ஊடாக வவுனியா நகரை நோக்கி ... தால் சில தினங்களாக லொறிகள் தென்பகுதி நோக்கிச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

## நினைவு கூருகின்றோம் ...

## 1992-12-03

1984ஆம் ஆண்டு இதே தினத்தில், தமிழகத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த -
நிசாம் (சீனித்தம்பி குமார்- பொத்துவில்- அம்பாறை)

வவுனியாவில், சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1985 ஆம் ஆண்டு, முல்லைத்தீவு, தண்ணிமுறிப்புப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் வீரச்சாவெய்திய -
கேசவன் (நல்லையா அருள்நேசன் கண்டி வீதி,

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3640)

## சிறுவன் மரணம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட விசர்நாயினால் கடியுண்ட சிறுவனொருவன் மரணமானான்.

துன்னாலை தெற்கைச் சேர்ந்த ஜெயம் உதயகுமார் (வயது 12) என்ற சிறுவனே விசர்நாய்க் கடியால் மரணமான சிறுவனாவான். பருத்தித்துறைப் பகுதியில் நாய் கடித் தொல்லை அதிகரித்து வருவதாகவும், இவ் வைத்தியசாலையில் விசர்நாய்க்கடிக்கான ஊசி மருந்துகள் இல்லாமல் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (25)

## நவம்பர் மாத ஓய்வூதியக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோருக்கான நவம்பர் மாதக் கொடுப்பனவு நேற்று முதல் யாழ். அடைக்கல மாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்பட்டு வருவதாக அதன் முகாமையாளர் து. வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.


**பாரதிதாசன் கல்வி நிறுவனம் (BECON)**

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி பரீட்சை

**B.A** 1993 ஏப்ரல் மீட்டல், வினாவிடை வகுப்பு

பொருளியல்
S. வரதராஜன் B.A. (Hons)

ஆரம்பம்:
**5. 12. 92**
சனி 2.00 P M
(சி-5528)



# 05-12-92

[சனிக்கிழமை]
பி. ப. 3 மணி

(சி-5521)



## கலை வர்த்தகக் கல்லூரி
## C. C. A.

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்

ஆண்டு: 9, 10, 11

மாலை நேர வகுப்புக்கள்

**ஆரம்பம்: 5.12.92**

| | |
|---|---|
| விஞ்ஞானம் | திரு- இரா.செல்வவடிவேல் |
| கணிதம் | திரு மகேந்திரன். |
| | திரு. நிமலநாதன் |
| தமிழ் | திரு. ஞானதிருக்கேசன் |
| ஆங்கிலம் | திரு. T. செளந்தர பாண்டியன் |
| சமூகக் கல்வி | திரு. வேலா |

★ சனி, ஞாயிறு, செவ்வாய், வியாழன் நான்கு நாட்களும் வகுப்புக்கள் நடைபெறும்.

★ ஏனைய பாடங்களும நடைபெறும்.

-நிர்வாகி

(சி-5494)



# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லிறோட், யாழ்ப்பாணம்

[O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

**O/L** EVENING CLASSES
(3.00 - 6.00)
Sat. & Sun. classes
(8.00 - 3.00)

**ஆண்டு 10, 9, 8, 7, 6**

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

| | |
|---|---|
| விஞ்ஞானம் | : திரு J.R. சூரி |
| கணிதம் | : திரு. ஜெகன் |
| ஆங்கிலம் | : திரு. விஸ்வநாதன் |
| சமூகக்கல்வி | : திரு கோபி |
| தமிழ் | : திரு. சிவா |
| வர்த்தகம் | : திரு. கருணாகரன் |
| சமயம் | : திரு. கெங்கா |

(இ/5506)

ஆரம்பம்
**05.12.92(சனி) மாலை3 மணி**


பாதிக்கிறது. நாட்டிற்காக உயிரைத் தியாகம் செய்யும் அனைத்து இராணுவத்தினரது மரணங்களும் காலத்தால் அழியாதவை. இவற்றை அரசு கிரிக்கட் விளையாட்டைப் போல் கருதக்கூடாது.

அன்றைய காலகட்டத்தில் 10வருடத்திற்கு ஆயிரம் இராணுவத்தினரே கொல்லப்பட்டனர். ஆனால் தற்போது வருடாந்தம் ஆயிரத்திற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்படுகின்றனர் என்றார்.

வோர்களுக்கு வழங்கப்பட உள்ளது. (24)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பலநோக்கு கூட்டுறவுச்சங்க தலைவர்கள் பொது முகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 10.00 மணிக்கு மணிக்கூட்டு வீதியில் உள்ள யாழ். மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் சபையின் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறும். (22)

## வவுனியாவுக்கு லொறிகள் மீண்டும் அனுமதி

ஒருவாரத்தின் பின்னர் வடபகுதி லொறிகள் இராணுவ சோதனை முகாம் ஊடாக வவுனியா நகரை நோக்கிச் செல்வதற்கு சிறிலங்கா இராணுவம் அனுமதி வழங்கியது.

நொச்சிமோட்டை பாலம் அமைந்துள்ள பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தால் சில தினங்களாக லொறிகள் தென்பகுதி நோக்கிச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

கடந்த 30 ஆம் திகதி பதினெட்டு லொறிகள் வவுனியா நகரைநோக்கிச் சென்றன. இவற்றில் கூட்டுறவுச் சங்க லொறிகளும் அடங்கும். (தி)

## வடக்கில் கர்ப்பிணிகளுக்கு போஷாக்கின்மை காரணமாக உயரம்குறைந்த சிசு பிரசவம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் பிரசவத் தாய்மாருக்கு ஏற்பட்டுள்ள நாள்பட்ட மந்தபோஷாக்கு காரணமாகப் பிறக்கும் குழந்தைகள் உயரம் குறைவாக பிறக்கின்றனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சராசரி பிறக்கும் குழந்தை ஒன்று 50 செ. மீ. உயரத்தைக் கொண்டு இருக்கவேண்டும் என்றும், இப்பிள்ளை முதலாவது வருடத்தில் 75 செ மீ. இருக்க வேண்டும். ஆனால் தற்போது வடமாகாணத்தில் சுமார் மூன்று வீதத்திற்கும், ஐந்து வீததிற்கும் இடைப்பட்ட பிள்ளைகளே இந்த உயரத்தைக் கொண்டிருப்பதாகவும், ஏனைய பிள்ளைகள் உயரம் குறைவாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிறக்கும்போது பிள்ளைகளின் சராசரி உயரம் 35 செ. மீ 40 செ, மீ. கொண்டதாகவும், அப்பிள்ளை ஒரு வயதை அடையும்போது 42 செ. மீ. முதல் 55 செ. மீ. வரை இருப்பதாகவும், பிள்ளைகள் வளர்ச்சியடைய அதன் வளர்ச்சி வீதம் குறைந்து செல்வதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

தாய்மார் தாய்ப்பால் வழங்குவது குறைந்து போகும் காலத்தில் பிள்ளைகளின் உயரமும், நிறையும் குறைவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது

முதலாவது வயதில் குழந்தைக்கு இந்த விழுக்காடு 24 வீதமாகவும், 2 ஆவது வயதில் 42 வீதமாகவும், 5 வயதில் 51 வீதமாகவும் உள்ளதைக் காணக் கூடியதாக இருக்கிறது.


## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

**புலமைப் பரிசில் வகுப்பு 1993**

கணிதம்: நயினை S. S. பிள்ளை
தமிழ்: சுந்தரலிங்கம்

ஆரம்பம்: 05-12-92 (சனி)

(சி-5461)



the left hand corner of the envelope. The Tender will be opened on the same day at 10.30 a. m.

– Registrar

(சி/5524)


## நினைவு கூருகின்றோம் ... 1992-12-03

1984ஆம் ஆண்டு இதே தினத்தில், தமிழகத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த -

நிசாம் (சீனித்தம்பி குமார்- பொத்துவில்- அம்பாறை)

வவுனியாவில், சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1985 ஆம் ஆண்டு, முல்லைத்தீவு, தண்ணிமுறிப்புப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் வீரச்சாவெய்திய -

கேசவன் (நல்லையா அருள்நேசன் கண்டி வீதி, பளை - யாழ்.)

பளைப் பகுதியில், சிறிலங்கா இராணுவத்தால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய -

★ சுந்தரி (வீரசிங்கம் சுந்தரராஜன் இயக்கச்சி - வவுனியா)

வவுனியாவில், சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1986ஆம் ஆண்டு மட்டு - வாழைச்சேனைப் பகுதியில், சிறிலங்கா அதிரடிப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

இராசமணி (நடராசா இராசநாயகம் கண்ணகிபுரம்- மட்டக்களப்பு)

இராஜசெல்வம் (அமிர்தகழி - மட்டக்களப்பு)

1987ஆம் ஆண்டு கொழும்பு நோக்கிச் சென்ற பேருந்தை, மட்டக்களப்புப் பகுதியில் வழி மறித்து இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 11 - தமிழர்கள்

1988-ம் ஆண்டு நாவற்குழிப்பகுதியில் இந்தியப்படையினர் மற்றும், தேச விரோதிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

லெப் அருள்/யோகம் (நவரட்ணம் அருட்செல்வம் -நாவற்குழி-யாழ்)

கீரிமலை-கருகம்பனையில் தேசவிரோதிகளாக் சுட்டுக் கொல்லப்பட்ட -

நாட்டுப்பற்றாளரான -

அண்ணா (சிவதாசன் நிர்மலன் - காங்கேசன்துறை - யாழ்)

யாழ் - கோயில் வீதியில் ஈ. பி.ஆர். எல் எவ் தேச விரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட - யாழ்-பற்றிக்ஸ் வீதியைச் சேர்ந்த தமிழர்.

1991-ம் ஆண்டு - மன்னார் - சிலாவத்துறை முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினருடன் அளக்கட்டு முறிப்புப்பகுதியில் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

லெப். மங்களன்/ரஞ்சித் [சின்னத்துரை நிமலேஸ்வரன்-கித்துள், கரடியனாறு-மட்டு]

கப்டன் பாவலன்/ஜிம்மால் (பூபாலபிள்ளை ஜெகதீஸ் புதுக்குடியிருப்பு, செங்கலடி - மட்டு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/5522)

நல்லூர் பிரதேச நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்

**சிந்தனைக்கு**

பொதுவாக உண்மையான விவேகம் என்பது அசைக்க முடியாத உறுதியே.

- நெப்போலியன் போனபார்ட்

# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 03-12-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2808
க. பெ. எண் - 05

## உள்ளொன்று வெளியொன்று

"பாலஸ்தீனியர் விவகாரத்தை மத்திய கிழக்குப் பிரச்சினையின் முக்கிய மையமாகவே சிறிலங்கா அரசாங்கம் எப் பொழுதும் கருதுகின்றது. சிக்கலான பிரச்சினைக்கு தவிர்க்க முடியாதவகையில் பாலஸ்தீனியரின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யாத தீர்வு எதையும் கண்டுபிடித்து விடுவது சாத்தியமானதல்ல". இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பாலஸ்தீனியர்களின் சர்வதேச தோழமைத் தினத்தை முன்னிட்டு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இவ் வாழ்த்துச் செய்தியில், "ஏற்கனவே ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களில் இருந்து இஸ்ரேல் துருப்புக்கள் மீளப் பெறுவதும் பாலஸ்தீனியரின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிப்பதும் நிரந்தர தீர்விற்குத் தேவையான முன் நிபந்தனைகளாகும் என மேலும் தெரிவித்துள்ளார்.

சுமார் நாற்பத்தி ஐந்து வருடங்களாக நீடித்து வரும் பாலஸ்தீனப்பிரச்சினை குறித்தும் அதற்கு வழங்கப்படக்கூடிய தீர்வு குறித்தும் சரியானதொரு கணிப்பீட்டைக் கொண்டிருக்கும் சிறிலங்கா ஜனாதிபதி ஏறத்தாழ அதே காலம் நீடிக்கும் தமிழரின் தேசிய இனப்பிரச்சினை குறித்து சரியான ஓர் சிந்தனையோ, அன்றித்தீர்வுத் திட்டத்தையோ முன் வைப்பதாக இல்லை.

பாலஸ்தீனப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால், பாலஸ்தீனியர்களின் அபிலாசைகளை யூதர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பது எந்தளவிற்கு மறுக்க முடியாததோ அதே போன்று தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையும் தீர்த்துவைக்கப்பட வேண்டும் என்றால் தமிழ் மக்களின் அபிலாசைகளை சிங்கள அரசு தீர்த்து வைக்க வேண்டும்.

இதேவேளை தமிழ்மக்களின் அபிலாசைகள் திரு. பிரேமதாசாவிற்கும், சிங்களவருக்கும் தெரியாத தொன்றல்ல. 1977 ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலின் போது அதாவது சுமார் 15 வருடங்களுக்கு முன்னரே தமிழ் மக்கள் பிரச்சினையின் தீர்விற்கு தமிழீழம் ஒன்றேவழி எனத் தீர்ப்பளித்துள்ளனர். இந்நிலையில், இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமானால் எந்த மட்டத்திலான தீர்வுத்திட்டம் ஒன்றை அரசு மேற்கொள்ள வேண்டும் என்பதை அவர் புரிந்து

## பாலஸ்தீனியர் அபிலாசை நிறைவேற்றப்பட வேண்டும்

**- பிரேமதாசா**

(கொழும்பு)

பாலஸ்தீனியர் விவகாரத்தை மத்திய கிழக்கு பிரச்சினையின் முக்கிய மையமாகவே சிறிலங்கா அரசாங்கம் எப்போதும் கருதுகின்றது. சிக்கலான இந்தப் பிரச்சினைக்கு தவிர்க்க முடியாத வகையில் பாலஸ்தீனியரின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யாமல் தீர்வு எதையும் கண்டுவிடுவது சாத்தியமானதல்ல இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கூறியுள்ளார்.

பாலஸ்தீனியர்களின் சர்வதேச தோழமை தினத்தை முன்னிட்டு பிரேமதாசா அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில், மேலும், ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களிலிருந்து இஸ்ரேல் துருப்புக்கள் மீளப்பெறுவதும், பாலஸ்தீனியரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதும், நிரந்தர தீர்வொன்றுக்கு தேவையான முன் நிபந்தனையாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் 26 மில்லியன் டாலர் கடன்

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு 26 மில்லியன் டொலரைக் கடனாக வழங்க உள்ளது.

இலங்கையின் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கே ஆசிய அபிவிருத்தி வங்கி சுமார் 26 மில்லியன் டொலரை கடனாக வழங்க சம்மதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

## அடுத்த வருட தேர்தலுக்கு எதிர்க்கட்சிகள் தயார்

(கொழும்பு)

அடுத்த வருட ஆரம்பத்தில் நடைபெற இருக்கும் பொதுத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்களைச் சந்திப்பதற்கு எதிர்க்கட்சிகள் தயாராகி வருகின்றன,

இலங்கை கம்யூனிசக் கட்சி, சுதந்திரக்கட்சி, சமசமாஜக் கட்சி நவசமசமாஜக் கட்சிஉட்பட ஜனநாயகஐக்கியமுன்னணி என்பன ஐ.தே.கட்சியை எதிர்த்து போட்டியிட போகின்றது என மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா கொழும்பு பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

இக்கட்சிகள் கூட்டு முன்னணியில் போட்டி இடுவதா என்பதைப்பற்றி இன்னும தீர்மானிக்கவில்லை என கட்சித் தலைவர்கள் தெரிவித்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

சமசமாஜக்கட்சி சகலஇடத்திலும் போட்டி இடுவதற்கு அபேட்சகர்களை நிறுத்துவதற்கு முடிவு செய்துள்ளதாக கட்சித் தலைவர் பேனாட் சொய்சாதெரிவித்துள்ளார்.

இதுபற்றி தமது கட்சியுடன் கூட்டு முன்னணி பேச்சுவார்த்தையில் ஈடுபடவில்லை என்றும் பேனாட் சொய்சா தெரிவித்தார். கம்யூனிஸ்ட் கட்சியும் தனதுஅபேட்சகர்பட்டியலை தயார் செய்கின்றது என்றும் தெரியவருகிறது.

ஜனநாயக ஐக்கிய தேசிய கட்சி சில இடங்களில் போட்டி இடப்போவதாகவும் அதில் ஏனைய எதிர்கட்சிகள் போட்டி இட்டாலும் தாம் விட்டு கொடுக்கபோவதில்லை என லலித் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார் இதே வேளை சகல இடங்களிலும் தமது அபேட்சகர்களை நிறுத்த போவதாகநவசமசமாஜக் கட்சி தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எனவே எதிர்கட்சிகள் கூட்டை மீண்டும் ஒரு நிலைப்படுத்த வேண்டும் என தினேஷ் குணவர்த்தனாவேண்டினார் தமது கட்சி தேர்தல் போட்டியில் இருந்து ஒதுங்கப் போவதாக கூறியுள்ளார்.

# தீவிரவாதிகளுக்கு எதிரான அரசியல் தலைமை இங்கில்லை

**-பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா**

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைக்கு தலைமை தாங்குவதற்கு தற்போது நாட்டில் ஒரு அரசியல் தலைமை இல்லை என பிரதிச் சபாநாயகர் காமினி பொன்சேகா அனுராதபுரத்தில் இருந்து 'திவயின' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர்கள் கருத்துத்தெரிவிக்கையில்; முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா உயிருடன் இருக்கும்போது யுத்த பூமியைப் பற்றி அனுதினமும் கவனம் செலுத்தியது மட்டும் அன்றித் தேவைப்படும் இடங்களுக்கு நேரடியாக அவர் சென்றும் பார்வையிட்டார்.

ஆனால் ரஞ்சனின் மறைவைத் தொடர்ந்து இந்த நிலை மாறிவிட்டது. நிதி ஒதுக்கீடு செய்கின்றோம். நிதி செலவு இடும்போது மட்டும் இதைப் பற்றிக் கதைக்கின்றோம். குறை கூறுகின்றோம். ஆனால் அவர்கள் படும் இன்னல்களை இங்கு வந்து பார்த்தபோது தான் உணரக் கூடியதாக இருந்தது என்றார்.

வடக்கு-கிழக்கு யுத்தத்திற்கு வருடாந்தம் பாரிய நிதியை ஒதுக்கீடு செய்கின்றோம். நிதி ஒதுக்கீட்டினால் யுத்தத்தை வெல்ல முடியாது என்பதை யாவரும் நன்கு உணர வேண்டும். எவ்வளவு பெரிய அளவில் நிதியை ஒதுக்கினாலும் நிம்மதியாக சீவிக்க முடியாத நிலை ஒன்று இன்று தோன்றியுள்ளது.

இராணுவத்தின் தேவைகள் முகாம்களை பார்வையிட்டு அறியப்படுவதில்லை. உயர் அதிகாரிகளிடம் இருந்து தகவல்களைப் பெற்றுக் கொண்டு நடவடிக்கையில் ஈடுபடுவதால் சாதாரண சிப்பாய்கள் பாதிப்பு அடைகின்றனர்.

வடக்கு-கிழக்கு யுத்த முனையில் உள்ள இராணுவ உயர் அதிகாரி ஒருவரிடம் இருந்து தான் இந்தத் தகவலைப் பெற்றதைத் தொடர்ந்து இங்கு வந்து பார்வை இட்டதாகவும் தெரிவித்தார்.

இங்கு இவர்களின் இருப்பிடங்கள் ஒரு புதிய உலகம் போலவே இருக்கின்றது. இங்குள்ள இராணுவத்தினர் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். பல இராணுவத்தினர் மனநிலை பாதிப்படைந்த நிலையிலேயே காணப்படுகின்றனர். இந் நிலையினை தொடர்ந்து நாம் நீடிக்க விடக்கூடாது.

மேலும் இராணுவத்தினருக்கு அடிப்படை வசதிகள் கூட ஏற்படுத்திக்கொடுக்கப் படவில்லை. அவர்களுக்கான உணவு, உடை, தங்குமிட வசதி, ஆயுத வசதி உட்பட சகலதும் பற்றாக்குறையாகவே உள்ளது.

இந் நிலையில் நான் எந்தக் கட்டத்திலும் உண்மையைக் கூற தயங்கப்போவதில்லை என்றும் இதற்கான எந்தப் பிரச்சினைக்கும் முகம் கொடுக்கத் தயார் எனவும் தெரிவித்தார்.

## சர்வதேச தரத்திற்கேற்ப மற்றொரு விமானநிலையம்

[கொழும்பு]

பொலநறுவை மாவட்டத்தின், ஹிங்குராங்கெத்த பகுதிகளில் சிறிலங்காவின் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் அமைக்கப்படவிருக்கிறது. இவ் விமான நிலையத்தை சர்வதேச ரீதியான தரம் வாய்ந்ததாக அமைப்பதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் உதவி நாடப்பட்டிருப்பதாக சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா அறிவித்தார்.

தற்போது ஹிங்குராங்கெத்தவில் இருக்கும் விமான நிலையம் உள்ளூர் சேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுமென்று இப் பகுதியில் அமைக்கப்படும் சர்வதேச விமான நிலையத்தின் மூலம் பொருளாதார வாய்ப்புகள் பெருகுமென்றும், அவர் மேலும் குறிப்பிட்டார்.

**கூட்டுறவு சங்க நெறியாளர் குழு**

## சொத்து குறித்த விபரம் வெளியிட பணிப்பு

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு தெரிவு செய்யப்பட்ட சங்கத் தலைவரும் ஏனைய நெறியாளர் குழு உறுப்பினர்களும் தாம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு தெரிவு செய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அவ் வருடத்தின் மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறு தனதும் தனது வாழ்க்கைத் துணைவியினதும் தமது பிள்ளைகளினதும் சொத்துக்கள் பொறுப்புக்களை உரிய படிவத்தில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு பிரகடனம் செய்ய வேண்டும் என கூட்டுறவுச் சங்க விதியில் தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றுநிருபம் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (17)

**அயோத்தியாவினுள்**

## கட்டுமானப் பொருள்களுடன் செல்ல மாநில அரசு தடை

(டில்லி)

அரசியலமைப்பு திருத்தம் கூட்டமொன்றில் பேசும்

## படைகளை அனுப்பியதற்கு உ. பி. முதல்வர் கண்டனம்

உத்தரப் பிரதேசத்தின் அயோத்தியாவில் மாநில அரசின் அனுமதியின்றிமத்திய அரசுப் படைகள்பணியில்ஈடுபடுத்தப்பட்டிருப்பது பற்றி உத்தரப் பிரதேச முதல்வர்கல்யாண் சிங் மத்திய அரசைக் குறை

பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் அவர் மேலும் குறிப்பிடுகையில்: மாநில அரசின் ஒப்புதலின்றி மத்திய அரசுப் படைகள் அனுப்பப்பட்டிருப்பதாக தெரிவித்துள்

சரியான ஓர் சிந்தனையோ, அன்றித்தீர்வுத் திட்டத்தையோ முன் வைப்பதாக இல்லை.

பாலஸ்தீனப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால், பாலஸ்தீனியர்களின் அபிலாசைகளை யூதர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பது எந்தளவிற்கு மறுக்க முடியாததோ அதே போன்று தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையும் தீர்த்துவைக்கப்பட வேண்டும் என்றால் தமிழ் மக்களின் அபிலாசைகளை சிங்கள அரசு தீர்த்து வைக்க வேண்டும்.

இதேவேளை தமிழ்மக்களின் அபிலாசைகள் திரு. பிரேமதாசாவிற்கும், சிங்களவருக்கும் தெரியாத தொன்றல்ல. 1977 ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலின் போது அதாவது சுமார் 15 வருடங்களுக்கு முன்னரே தமிழ் மக்கள் பிரச்சினையின் தீர்விற்கு தமிழீழம் ஒன்றேவழி எனத் தீர்ப்பளித்துள்ளனர். இந்நிலையில், இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமானால் எந்த மட்டத்திலான தீர்வுத்திட்டம் ஒன்றை அரசு மேற்கொள்ள வேண்டும் என்பதை அவர் புரிந்து கொள்ளாமல் இருக்க முடியாது.

இதேவேளை, பாலஸ்தீனப் பிரச்சினைக்கு ஏற்கனவே ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்திலிருந்து இஸ்ரேல் இராணுவம் மீளப்பெறப்படுவதும் பாலஸ்தீனியர்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிப்பதுமே ஒரேவழி எனக் கூறியுள்ள திரு. பிரேமதாசா தமிழர் பிரச்சினையின் மையமாக உள்ள தமிழர் தாயகத்தை துண்டாட முனைவதும், தாயகத்தை இராணுவத்தின் மூலமும், சிங்களக் குடியேற்றத்தின் மூலமும் ஆக்கிரமிக்க முற்படுவதும், இனப்பிரச்சினையை மேலும்மேலும் சிக்கலாக்குமே ஒழிய ஒருபோதும், தீர்த்துவிடப் போவதில்லை என்பதையும் புரிந்து கொள்ளாமல் இருப்பாரா என்பது கேள்விக்குரியதே.

ஆயினும் ஆட்சி அதிகாரம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டுள்ளமையால் தமிழ் மக்களின் அபிலாசைகளைத் தீர்க்கக்கூடிய தீர்வுத்திட்டம் எதையும் அவரால் முன் வைக்க முடியவில்லை என்பதே நிதர்சனம்.

இதேவேளை பாலஸ்தீனியர் பிரச்சினைக்கு திரு. பிரேமதாசா முன் வைத்துள்ள தீர்வுக்கான யோசனையானது கொழும்பிலுள்ள தமிழ் குழுக்களுக்கு ஓர் நற் போதனையாக அமையக் கூடியதொன்றாகும். பாலஸ்தீனியரின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவேண்டுமெனில் இஸ்ரேல் இராணுவமும், ஆயுதந் தாங்கிய யூதக் குடியேற்றவாசிகளும் ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசத்தில் இருந்து வெளியேற வேண்டும் என்பதே ஒழிய ஆக்கிரமித்துள்ள பகுதிகளை யூதர்களிடம் விட்டுவிட்டு பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியும் எனத் திரு. பிரேமதாசா கூறவில்லை.

தேசிய இனப்பிரச்சினை ஒன்றிற்கு திரு. பிரேமதாசாவின் அணுகுமுறை உள் நாட்டில் ஒன்று வெளிநாட்டில் ஒன்றாக இருப்பினும் பொதுவில் தேசிய இனப்பிரச்சினையானது அவற்றின் தாயகத்துடன்பிணைக்கப்பட்டுள்ளது என்பதோடு, தாயகத்தில்விட்டுக் கொடுப்பிற்கோ, பேரத்திற்கோ இடமில்லை என்பதை திரு. பிரேமதாசாவின் இந் நிலைப்பாடே உணர்த்துவதாகவுள்ளது. இதனை தமதுஅரசியல் லாபம் கருதி தமிழர் தாயகத்தை துண்டாடவும், பங்கிடவும் முற்பட்டுள்ள தமிழ்க் குழுக்கள் புரிந்து கொள்ளுதல் நல்லது.

---

என்பதைப்பற்றி இன்னும் தீர்மானிக்கவில்லை என கட்சித் தலைவர்கள் தெரிவித்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

சமசமாஜக்கட்சி சகலஇடத்திலும் போட்டி இடுவதற்கு அபேட்சகர்களை நிறுத்துவதற்கு முடிவு செய்துள்ளதாக கட்சித் தலைவர் பேனாட் சொய்சாதெரிவித்துள்ளார்.

கட்சி தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எனவே எதிர்கட்சிகள் கூட்டை மீண்டும் ஒரு நிலைப்படுத்த வேண்டும் என தினேஷ் குணவர்த்தனாவேண்டினார் தமது கட்சி தேர்தல் போட்டியில் இருந்து ஒதுங்கப் போவதாக கூறியுள்ளார்.

பொலநறுவை மாவட்டத்தின், ஹிங்குராங்கெத்த பகுதிகளில் சிறிலங்காவின் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் அமைக்கப்படவிருக்கிறது. இவ் விமான நிலையத்தை சர்வதேச ரீதியான தரம் வாய்ந்ததாக அமைப்பதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் உதவி நாடப்பட்டிருப்பதாக சிறிலங்கா

வித்தார்.

தற்போது ஹிங்குராங்கெத்தவில் இருக்கும் விமான நிலையம் உள்ளூர் சேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுமென்று இப் பகுதியில் அமைக்கப்படும் சர்வதேச விமான நிலையத்தின் மூலம் பொருளாதார வாய்ப்புகள் பெருகுமென்றும், அவர் மேலும் குறிப்பிட்டார்.

றவுச் சங்க விதிபில் தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்று நிருபம் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(17)

---

## அயோத்தியாவினுள்

# கட்டுமானப் பொருள்களுடன் செல்ல மாநில அரசு தடை

(டில்லி)

அயோத்தியாவில், பாபர் மசூதி வளாகத்திற்கு எதிரேயுள்ள உத்தரப்பிரதேச அரசினால் கையகப்படுத்தப்பட்ட நிலப்பகுதிக்குள் கட்டுமானப் பணிக்கான இயந்திர சாதனங்களையோ, பொருள்களையோ கொண்டுசெல்வதற்கு உத்தரப் பிரதேச அரசு தடை விதித்துள்ளது.

அயோத்தியாவின் நிலைமை குறித்து கண்காணிப்பதற்கென உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட பார்வையாளரிடமிருந்து பாதகமான அறிக்கை எதுவும் கிடைக்கப்பெற்றால் உடனடி நடவடிக்கை எடுக்க உச்சநீதிமன்றம் தயங்காது என்று மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் கட்டுமானப்பணி உட்பட எல்லாப் பணிகளும் ஆரம்பிக்கப்பட இருக்கும் திருப்பணியில் அடங்கும் என்று விஷ்வ ஹிந்து பரிஷத் கூறியுள்ளது.

அத்துடன் அயோத்தியா விவகாரம் பேச்சு வார்த்தைகள் மூலமாகவோ அல்லது, அரசியலமைப்பு திருத்தம் வாயிலாகவோ தீர்க்கப்பட வேண்டுமேயன்றி, நீதிமன்றத்தின் தீர்ப்பினால் தீர்க்கப்பட முடியாது என்று பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானி பொதுக் கூட்டமொன்றில் பேசும் போது கூறியுள்ளார். அத்துடன் அயோத்தியில் தற்போது இருப்பது ஆலயமே அன்றி மசூதி அல்ல என்றே தான் கருதுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## பாபர்மசூதி வளாகத்தின்

# பாதுகாப்பு நிலைமை குறித்து மீள்பரிசீலனை செய்க

-உள்துறை அமைச்சர் சவான்

(டில்லி)

அயோத்தியாவில் சர்ச்சைக்குட்பட்ட பாபர்மசூதி வளாகத்தின் பாதுகாப்பு குறித்து தீவிரமாக மறுபரிசீலனை செய்யும்படி கோரும் கடிதமொன்றை மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் உத்தரப் பிரதேச முதல்வர் கல்யாண்சிங்கிற்கு எழுதியுள்ளார்.

இக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில்; இப் பகுதியின் பாதுகாப்புக் குறித்து மத்திய அரசு கவலை கொண்டிருப்பதாகவும் கூறியுள்ளார். எனவே ஆயுதப்படைகளின் துணையோடு சிறப்பு பாதுகாப்பு படை அணி ஒன்று அமைக்கப்பட்டு பாபர் மசூதி வளாகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், சுமார் 25,000க்கு மேற்பட்ட கரசேவைத்தொண்டர்கள் அப் பகுதிக்கு சென்றிருப்பதாக கூறப்படுவதையடுத்து இது அவசியமாகிறது என்றும் அமைச்சர் தமது கடிதத்தில்சுட்டிக்காட்டியுள்ளார்

அத்துடன் உத்தரப் பிரதேசத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்ட துணை இராணுவத்தினர் ஒழுங்கற்ற விதத்தில் நடந்து கொண்டதாகக் கூறப்படுவதை அமைச்சர் சவான் மறுத்துள்ளார்.

# பாக். விமானங்கள் தரையிறங்க அமெரிக்காவில் தடை வரலாம்?

பாகிஸ்தானின் சர்வதேச விமான நிறுவனத்தைச் சேர்ந்த சில பணியாளர்கள் அமெரிக்காவிற்குள் போதைப் பொருள்களைக் கடத்திச் சென்றதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதை அடுத்து பாகிஸ்தானின் போதைப் பொருள் தடுப்புத்துறை அமைச்சர் வாஷிங்டனுக்கு விரைந்துள்ளார்.

இதே வேளைஇச் சம்பவத்தையடுத்து பாகிஸ்தானின் விமானங்கள், அமெரிக்காவில் தரை இறங்குவதற்கு தடை விதிக்கப்படலாம் என்று பெஷாவரிலிருந்து வெளியாகும் பிரான்டியர் போஸ்ட் என்னும் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இச் சம்பவத்திற்காக ஐம்பது லட்சம் டாலர் அபராதம் ஏன் விதிக்கப்படக்கூடாது என்பதற்கு காரணம் காட்டுமாறு அமெரிக்காவின் போதைப்பொருள் தடுப்பு ஏஜென்சி பாகிஸ்தான் விமான நிறுவனத்தை கேட்டுள்ளது.

காரூரிலிருந்து நியூயோர்க்கிற்கு சென்ற பாகிஸ்தானின் விமானம் ஒன்றின் மூலம் ஐம்பதுகிலோகிராம் எடையுள்ள ஹிரோயின் போதைப் பொருள் கடத்திச் செல்லப்பட்டுள்ளது இதுதொடர்பாக நியூயோர்க்கில் இருக்கும்பாகிஸ்தான் விமான நிறுவனத்தின் முகவர் உட்பட மேலும் இரு பாகிஸ்தானியர்களையும் அமெரிக்க நிர்வாகத்தினர் கைது செய்துள்ளனர்.

# படைகளை அனுப்பியதற்கு உ. பி. முதல்வர் கண்டனம்

உத்தரப் பிரதேசத்தின் அயோத்தியாவில் மாநில அரசின் அனுமதியின்றிமத்திய அரசுப் படைகள்பணியில்ஈடுபடுத்தப்பட்டிருப்பது பற்றி உத்தரப் பிரதேச முதல்வர்கல்யாண்சிங் மத்திய அரசைக் குறை கூறியுள்ளார்.

பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் அவர் மேலும் குறிப்பிடுகையில்: மாநில அரசின் ஒப்புதலின்றி மத்திய அரசுப் படைகள் அனுப்பப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

# தமிழ் நாடு அரசை கவிழ்க்க திட்டம் எதுவும் இல்லை

-நரசிம்மராவ்

(சென்னை)

தமிழ் நாடு அரசை நிலைகுலையச் செய்யும் எந்த நடவடிக்கையிலும் மத்திய அரசு ஈடுபடவில்லை என்று பிரதமர் பி.வி. நரசிம்மராவ் கூறியுள்ளார்.

வெள்ளப் பாதிப்புக்கள் பற்றி நேரில் கண்டறிவதற்காக சென்னை வந்துள்ள அவர் செய்தியாளரிடம் பேசுகையில் மேலும் எந்த மாநில அரசையும் கவிழ்க்கும் திட்டமெதையும் மத்திய அரசு கொண்டிருக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

# சந்திரலேகாமீது அசிட்வீச்சு சி. பி. ஐ. விசாரிக்குமாம்

தமிழக ஜனதாக்கட்சித் தலைவரும் முன்னாள் ஐ ஏ. எஸ். அதிகாரியுமான சந்திரலேகாமீது திராவகம் வீசிய சம்பவம் குறித்து சி. பி. ஐ. விசாரிக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் சந்திரலேகாவிடம் உறுதியளித்திருக்கிறார். தமிழகப் பொலிஸ் விசாரணையில் எனக்கு நம்பிக்கையில்லை. சி. பி. ஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று சந்திரலேகா கோரிக்கை விடுத்திருந்ததைத் தொடர்ந்து இந்த உறுதி மொழி வழங்கப்பட்டிருக்கிறது.

அதேவேளை எம். ஜி. ஆர். ஆட்சியில் முக்கிய பதவி வகித்த எனக்கே இந்த கதி என்றால் ஏனைய அதிகாரிகளுக்கு இது போன்ற சம்பவம் நிகழாது என்பதற்கு என்ன உத்தரவாதம் என்றும் அவர் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

அதேவேளைஅரசியலில் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்குப் போட்டியாக உருவெடுக்கும் எண்ணத்தில் சந்திரலேகா அரசியலில் குதித்திருக்கிறார். இவருக்குப்பக்கபலமாக சுப்பிரமணியம் சுவாமி, முன்னாள் அமைச்சர்களான ராஜாராம், சாமிநாதன், திருநாவுக்கரசு மற்றும் முன்னாள் சட்டப் பேரவைச் சபாநாயகர் பி. எச் பாண்டியன் ஆகியோர் உள்ளனர்.

தமிழக ஜனதாக்கட்சித் தலைவராக சந்திரலேகா நியமிக்கப்பட்டிருக்கிறார். இதனைத் தொடர்ந்து முதலமைச்சர் ஜெயலலிதாவை பழிவாங்கப் போவதாக சந்திரலேகா சபதம் எடுத்திருக்கிறார். "ஜெயலலிதா யார் என்று எனக்குத் தெரியும். அவரது முகத்திரையை கிழித்தெறிவேன்" என்று செய்தியாளர்களுடன் பேசும்போது சந்திரலேகா சபதம் எடுத்தார். என் மீது திராவகம் வீசப்பட்டதற்கு ஜெயலலிதா தான் காரணம் என்று நிருபர்களின் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும்போது அவர் தெரிவித்தார். "ஸ்பிக்" நிறுவனத்தின் அரசுக்குரிய பங்குகளை விற்பனை செய்தது தொடர்பாக எனக்கும் ஜெயலலிதாவுக்கும் தகராறு ஏற்பட்டது. இந்தவகையில் தான் என்மீது திராவகம் வீசப்பட்டதற்கும் ஜெயலலிதாவுக்கும் சம்பந்தம் உண்டு என நான் நினைக்கிறேன். இது ஒன்றுதான் எனது சந்தேகம் என்றும் சந்திரலேகா நிருபர்களிடம் தெரிவித்தார்.

ஈழநாதம்

# பாக், ஏழு அணுக்குண்டுகள்; அமெரிக்க செனட்டர் தெரிவிப்பு

[வாஷிங்டன்]

இந்தியாவைத் தாக்கக்கூடிய அணுகுண்டுகளைத் தயாரிக்கக் கூடிய நிலையில் பாகிஸ்தான் உள்ளது. ஒரு சில மணிநேரத்தில் இணைத்துப் பொருத்தக் கூடிய நிலையிலுள்ள ஏழு குண்டுகள் பாகிஸ்தானிடம் இருப்பதாக அமெரிக்க செனற் உறுப்பினரான லாறி பிரஸ்லர் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் அத்தகைய குண்டுகளை ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு விமானத்தில் எடுத்துச்சென்று வீசவும் முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

அணு ஆயுதப் பரவல் தடுப்புத் தொடர்பான விவாதம் ஒன்றில் வாஷிங்டனில் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

அமெரிக்கமத்தியபுலனாய்வு நிறுவனமான சி ஐ ஏ பாகிஸ்தானிடம் அணுகுண்டு தயாரிக்கும் வலிமை இருப்பதாகத் தன்னிடம் கூறியதாகப் பிரஸ்லர் குறிப்பிட்டார்.

அமெரிக்க ஜனாதிபதியாக றேகன் இருந்தசமயம் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நிறுவனங்களிடமிருந்து அணுவாயுதப் பொருள்களை வாங்க றேகன் பாகிஸ்தானை அனுமதித்தார் என்றும் அவர் குற்றம் சாட்டினார். பாகிஸ்தான் தனது அணுவாயுதத் திட்டம் குறித்துத் தவறான தகவல்களையே வெளியுலகுக்கு அறிவித்துவருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் அணுவாயுதத் திட்டத்தைக் கைவிடும்வரை அந்தநாட்டிற்கு எந்தவிதமான இராணுவ உதவித் திட்டங்களையும் வழங்கக்கூடாது எனவும் அவர் தெரிவித்தார்.

## இந்திய முதலீடுகள் சிறிலங்காவில் அதிகரிக்கலாம்

(கொழும்பு)

சிறிலங்காவில் நிலவும் முதலீட்டு சூழலை இந்தியா சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் என்று முதலீட்டுக் கருத்தரங்கில் கலந்துகொண்ட இந்தியக் குழு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இம் முதலீட்டுக் கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய இந்தியக் குழுவின் தலைவர் அங்கு மேலும் கூறுகையில்; இலங்கை அரசாங்கமும் இந்தியாவுடன் நட்புறவை பேபாராட்டுகிறது. இந்திய விரோத உணர்வுக்கு இங்கு துளியும் இடமில்லை என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் இலங்கையில் முதலீடுசெய்ய ஜேர்மன், கொரியா, ஜப்பான், அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் போட்டியிடுவதாகவும் தனக்குரிய இடத்தைப் பெற்றுக் கொள்ள இந்தியா தயங்கக்கூடாது எனவும் அவர் தெரிவித்தார்.

## புதுக்குடியிருப்பில்

அனுமதியை எதிர்பார்த்து இருப்பதாகவும் அனுமதி கிடைத்ததும் மக்கள் வங்கி உயர்மட்ட குழு ஆவணங்களை எடுத்துவந்து முல்லைத்தீவு கிளையை புதுக்குடியிருப்பில் நடத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி)

## கிருமானிக்கு மக்கள் அஞ்சலி

(குருநகர்)

யாழ். மாவட்டத்தில் கடந்த 30 ஆம் திகதி நடந்த வெடி விபத்தொன்றில் வீரச்சாவு அடைந்த கப்டன் முகுந்தன் - கிருமானி (பிரான்சிஸ் றொபேட் வின்சன், சென் ஜேம்ஸ் வீதி, குருநகர்) யின் புகழுடல் நேற்று (2-12-92) முற்பகல் குருநகர் சனசமுக நிலைய முன்றலில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

பெருந்திரளான பெண்கள், ஆண்கள், சிறுவர், இளைஞர் நிலைய முன்றலில் கூடி கப்டன் கிருமானியின் புகழுடலுக்குத் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

பின்பு புலிகளின் பாண்ட் வாத்திய இசையுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது. (21)

## திறப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தை மீண்டும் திறப்பதற்கான துரித முயற்சியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். நவம்பர் 25 ஆம் திகதி முதல் மூடப்பட்ட இப்பல்கலைக்கழகத்தை மீண்டும் திறப்பதற்கு துரிதமான முயற்சி மேற்கொள்ளப் படுவதாகவும் கூறப்படுகிறது.

## நவம்பர் மாதத்திற்குரிய நிவாரண விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்தவர்களுக்கான நவம்பர் மாதத்தின் கடைசி இரண்டு வாரத்திற்குரிய இலவச உலர் உணவு சகல பல நோ. கூ. சங்கங்களுக்கும் யாழ். செயலகம் விநியோகம் செய்துள்ளது.

யாழ் செயலகத்தினால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருள்களின் விபரம் வருமாறு; அரிசி (வெ. ப.), மா, சீனி, மைசூர்ப்பருப்பு, உழுத்தம் பருப்பு, தேயிலை ஆகியவை சகலஅங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கும் விநியோகிக்க வழங்கப்பட்டுள்ளதாக யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதி அறிவித்துள்ளது. [பா]

## கைது

ஜே.வி.பி.யின் உளவுப் பிரிவுக்கு பொறுப்பானவர் என்று கூறப்படும் நபரொருவர் அண்மையில் பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருக்கும் போது கைது செய்யப்பட்டுள்ளார். மஹத்தயா என்றழைக்கப்படும் இந்த நபர் ஜே.வி.பியின் உளவுப்பிரிவுக்கு பொறுப்பாக இருந்தவர் என்றும் கூறப்படுகிறது தங்காலைப் பொலிசார் தற்போது இவரை விசா

# மாகாண சபைகளை அரசு கலைக்க வேண்டும்

- தினேஸ் குணவர்த்தனா

(கொழும்பு)

மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் மாகாண சபைகளை அரசு கலைத்தல் வேண்டும் என மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த தினேஸ் குணவர்த்தனா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்றுக்காலை சிறிலங்கா பாராளுமன்றத்தில் இடம் பெற்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கான நிதிஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

இது பற்றி அவர் அங்கு மேலும் விளக்குகையில்: எதுவித பிரயோசனமும் அற்ற இந்த மாகாண சபைகளைக் கலைத்து விடுவது பொதுமக்களுக்கு பல வழிகளில் நன்மை தரும். அது கல்வி, சுகாதாரம் போக்குவரத்து, உள்ளூராட்சி எல்லா விடயங்களிலும் தேக்க நிலையையே உருவாக்குகிறது தொடர்ந்தும் குளறுபடி செய்கிறது.

அரசாங்க ஆணைகளுக்கு சுதந்திரமாகச் செயற்பட முடியவில்லை. அவர்கள் அரசியல் வாதிகளின் கால்பந்தாகி விட்டார்கள். இதுவரை அதிகார பரவலாக்கல் அரசகரும மொழி ஆணைக்குழு சிங்கள, தமிழ் மொழி வளர்ச்சிக்காக எதனையும் செய்துவிடவில்லை. அதன் தலைவர் பதவி விலகுதலே நன்மை தரும். பிரதேச செயலக செயலாளர்களை நியமிக்கும் திணைக்களம் அமைச்சு சுதந்திரமாக செயற்படல் வேண்டும் என்றார்.

## சர்வதேசவிசாரணை

எதிர்பார்ப்பதாகவும் அவர் எந்த வகையிலான சர்வதேச விசாரணைக் குழுவை எதிர்பார்க்கிறார் என்று அறிவிக்கும்படியும் அந்த அறிக்கையில் கேட்டுள்ளனர்.

## கொப்பேகடுவ

விடுத்தார்.

இக் கருத்தை முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா உள்ளிட்ட அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களும் ஆமோதித்தனர்.

பிரிட்டனைச் சேர்ந்த முன்னாள் இராணுவ வெடிகுண்டு நிபுணர் ஜே. ஆர். வைத்தின் முடிவின்படி வாகனத்திலிருந்த குண்டு வெடித்து கொப்பேகடுவ கொலையுண்டதாக காமினி திஸாநாயக்கா தெரிவித்தார். வெடிகுண்டு நிபுணரின் அறிக்கை சம்பந்தமான வீடியோப் படத்தையும் திருமதி லலி கொப்பேகடுவ செய்தியாளருக்குக் காட்டினார்.

கொப்பேகடுவவின் மரணம் குறித்து சர்வதேச மட்டத்திலான விசாரணைக் குழு ஒன்றை அமைக்கக் கோரும் கடிதம் திருமதி கொப்பேகடுவவினால் பிரதமருக்கும்பிரதிப்பாதுகாப்பு அமைச்சருமான டி. பி. விஜயதுங்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## 'பாஜ்'கள் சேதமானதால் பொருள் இறக்குவது தாமதம்

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்தில் ஏற்பட்ட சேதங்களாலும் பொருள்களை கப்பலில் இருந்து இறக்கிவர பயன்படுத்தப்படும் 'பாஜ்'கள் பழுதடைந்ததினாலும் கடந்த சில தினங்களாக நிலவும் மோசமான வானிலையாலும் கப்பலில் இருந்து உணவுப் பொருள்கள் இறக்கும் வேலைகள் தாமதமடைந்துள்ளன.

பெரிய துவாரங்கள் ஏற்பட்ட 'பாஜ்'களைப் பயன்படுத்தி கப்பலில் இருந்துஉணவுப் பொருள்களை இறக்குவதில் கடலில் தற்போது ஏற்பட்டுள்ள மோசமான நிலையில் ஆபத்துக்கள் ஏற்படும் சூழ்நிலை தென்பட்டு வருகிறது.

இத் துறைமுகத்தில் ஐந்து 'பாஜ்'கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுவந்தன அதில் இரண்டு 'பாஜ்'கள் கைவிடப்பட்ட நிலையிலும் மற்றைய மூன்று 'பாஜ்'களில் இரண்டு பாரிய துவாரங்கள் ஏற்பட்ட நிலையிலும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன..

இதனால் ஒரு தொகுதி உணவுப் பொருள்களுடன் இத்துறைமுகத்திற்கு வந்த ''மெரினா'' என்ற கப்பலில் இருந்து பொருள்களை இறக்க முடியாமல் அக்கப்பல் திரும்பிச்சென்று காங்கேசன் துறைமுகத்தில் காத்து நிற்கிறது. அதேவேளை சில தினங்களில் ''குமாரி'' என்ற கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைய இருக்கிறது.

## ருமேனியர் கைது

சுந்தரைக் கடற்கரையில் காலைப்பொழுதில் நடமாடிய இரு வெளிநாட்டவர்களைச் சந்தேகத்தின் மீது பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

விசாரணையிலிருந்து அவர்கள் ருமேனியர் எனத் தெரியவந்துள்ளது. அவர்கள் புகலிடம் தேடி ருமேனியாவை விட்டு வெளியேறியுள்ளதாக பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

02.12.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்;- 6901

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

22-5622, 26-6796, 24-5454, 27-5907, 25-7508, 26-2135, 24-5955, 24-7628.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-9490, 27-9365, 28-3528, 27-9416, 27-5822, 27-2056, 27-2084, 27-9661, 27-5682, 26-3812, 26-4393, 27-7952, 40-7583, 24-4504, 21-9167, 24-4390, 27-1122, 26-5493, 24-6448, 26-4501, 24-4917, 26-582.

# வன்னியின் எல்லையில் காவியம் படைத்த வேங்கைகள்



# தமிழீழ காவல்துறை

களை எடுத்து வந்து முல்லைத் தீவு கிளையை புதுக்குடியிருப்பில் நடத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி)

விரோத உணர்வுக்கு இங்கு துளியும் இடமில்லை என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் இலங்கையில் முதலீடுசெய்ய ஜேர்மன்,

இடம் பெயர்ந்தவர்களுக்கான நவம்பர் மாதத்தின் கடைசி இரண்டு வாரத்திற்குரிய இல வச உலர் உணவு சகல பல நோ. கூ. சங்கங்களுக்கும் வழங்கப்பட்ட நிவாரணப் பொருள்களின் விபரம் வருமாறு; அரிசி (வெ. ப.), மா, சீனி, மைசூரிப்பருப்பு, உழுத்தம் பருப்பு, தேயிலை ஆகியவை சகலஅங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கும் விநியோகிக்க வழங்கப்பட்டுள்ளதாக யாழ் செயலக புனர் வாழ்வுப் பகுதி அறிவித்துள்ளது. [பா]

# வன்னியின் எல்லையில் காவியம் படைத்த வேங்கைகள்



லெப். செல்வம்



லெப். குணசீலன் (அன்ஸ்ரின்)



லெப்டினன்ட் ஜெயா



லெப்டினன்ட் குரு



லெப். அரவிந்தன்



வீரவேங்கை நிமலன்



வீர வேங்கை மதியழகன்



வீர வேங்கை சரோஜன்



வீர வேங்கை ஜீவகுமார்

## கைது

ஜே.வி.பி.யின் உளவுப் பிரிவுக்கு பொறுப்பாளவர் என்று கூறப்படும் நபரொருவர் அண்மையில் பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருக்கும் போது கைது செய்யப்பட்டுள்ளார். மஹத்தயா என்றழைக்கப்படும் இந்த நபர் ஜே வி.பியின் உளவுப்பிரிவுக்கு பொறுப்பாக இருந்தவர் என்றும் கூறப்படுகிறது இங்காலைப் பொலிசார் தற்போது இவரை விசாரணை செய்து வருகின்றனர்

### சர்வதேச

லார்து ஆகிய நாடுகளின் தீவிரவாத இயக்கங்களுடன் இவருக்குத் தொடர்பிருப்பதாக அதே தரப்புத் தெரிவிக்கிறது.

### திருமலையில்

பழனித்தம்பி சுந்தரலிங்கம் (வயது60) விஜித்தா (வயது29) அ. பேரின்பராசா (வயது30) அ. அன்டா (வயது25) திருமதி தங்கராசன் வயது55) அ. காளிகப்பு (வயது70), செல்லத்துரை (வயது40), சந்தசாமி யோகம் (வயது32), முத்துக்குமார் (வயது40) ஆகியோரையே கைது செய்துள்ளனர்.

இவர்கள் பற்றிய விபரங்கள் எதுவும் இதுவரை தெரியவில்லை.

### பதிவுசெய்ய

குடியிருப்பாளர் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். அதுவும் பொலிசார் குறிப்பிடும் இடத்தில் தான் போட்டோபிரதி எடுக்க வேண்டும். போட்டோ பிரதி ஒன்றுக்கு ரூபா 10 அறவிடப்படுகிறது.

### அரசியலில்

விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்; மஞ்சள் அங்கிக்கு நாட்டில் இன்னமும் மதிப்பு உள்ளது. மஞ்சள் அங்கிக்குரிய அந்த மதிப்பை பாதுகாக்க வேண்டியது மகா சங்கத்தினர் பொறுப்பாகும். கட்சி சார்பற்ற நிலையில் இருந்தால்தான் மகாசங்கத்தினர் இப்பொறுப்பை நிறைவேற்ற முடியும் எனவே மகா சங்கத்தினர் தமது மதிப்பையும், அந்தஸ்தையும் அரசியல் வாதிகளுக்கு முன்பாக தாழ்த்திக் கொள்ளக் கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

னால் இராணுவ வெடிகுண்டு நிபுணர் ஜே. ஆர். வைத்தின் முடிவின்படி வாகனத்திலிருந்த குண்டு வெடித்து கொப்பேகடுவ கொலையுண்டதாக காமினி திஸாநாயக்கா தெரிவித்தார். வெடிகுண்டு நிபுணரின் அறிக்கை சம்பந்தமான வீடியோப் படத்தையும் திருமதி லலி கொப்பேகடுவ செய்தியாளருக்குக் காட்டினார்.

கொப்பேகடுவவின் மரணம் குறித்து சர்வதேச மட்டத்திலான விசாரணைக் குழு ஒன்றை அமைக்கக் கோரும் கடிதம் திருமதி கொப்பேகடுவவினால் பிரதமரும்பிரதிப்பாதுகாப்பு அமைச்சருமான டி. பி. விஜயதுங்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**02.12.92**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்;- 6901

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

22-5622, 26-6796, 24-5454, 27-5907, 25-7508, 26-2135, 24-5955, 24-7628.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-9490, 27-9365, 28-3528, 27-9416, 27-5822, 27-2056, 27-2084, 27-9661, 27-5682, 26-3812, 26-4393, 27-7952, 40-7583, 24-4504, 21-9167, 24-4390, 27-1122, 26-5493, 24-6448, 26-4501, 24-4917, 26-582.


# தமிழீழ காவல்துறை

# பதவி வெற்றிடம்

**(1) சாரதி: (வாகனம் ஓட்டுநர்கள்)**
**இலேசான, பாரமான வாகனங்கள்**

**கல்வித்தகைமை - 8-ம் வகுப்பு சித்தி**

**வயது: 18 - 30 வரை உயரம்: 5' - 5' 6" வரை**

திருமணமாகாதவர் மட்டும். சாரதி வேலையில் குறைந்தது 5 வருட அனுபவமுள்ளவர்களும் அத்தாட்சிப் பத்திரங்களுடன் நாவலர் வீதியிலுள்ள தமிழீழ காவல்துறையின் தலைமைச் செயலகத்திற்கு 10 12.92 வரை சமுகந்தரவும்.

**(2) உப பரிசோதகர் / காவலர் தரங்கள்**

**தகைமைகள்: 8-ம் வகுப்பு தொடக்கம்**
**க. பொ. த. (உயர்தரம் வரை)**

**உயரம்: 5' - 5' 6" வயது: 18 - 30 வரை.**

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 10-12 92 வரை நாவலர் வீதியிலுள்ள தமிழீழ காவல்துறையின் அலுவலகத்திற்கு சமுகந்தரவும். தபால் மூலம் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஆண் / பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்

பா. நடேசன்
பொறுப்பாளர்
தமிழீழ காவல்துறை

(சி-5520)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது